
ஸ்ரீராமஜெயம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்தைச் சார்ந்த

**கல்லங்குறிச்சி**

அருள்மிகு கலியுக வரதராசப் பெருமாள் திருக்கோயில்

# வரலாறு



உற்சவர் அருள்மிகு வரதராசப் பெருமாள்

இஃது ஆதீன பரம்பரை தருமகர்த்தா

திரு கோ. கோவிந்தசாமி படையாட்சி அவர்களால்

வெளியிடப்படுகிறது.

உரிமை: ஆதீன பரம்பரை தருமகர்த்தா அவர்களுக்கு

அருள்மிகு கம்பப் பெருமாள் (கலியபெருமாள்) ஸ்தாபகர்



ஸ்ரீ ராமஜெயம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்தைச் சார்ந்த

**கல்லங்குறிச்சி**

அருள்மிகு

# கலியுக வரதராசப் பெருமாள் திருக்கோயில்

# வரலாறு

நேரிசை வெண்பா

கல்லங் குறிச்சியுறை கம்பப் பெருமாள்தன்
நல்லடியைப் போற்றுவார்தாம் நாடோறும்—செல்வந்தான்
பெற்றிடுவர் சீர்மிகுந்தே பேருலகில் வாழ்ந்தினிதா
யுற்றிடுவ ரென்றே யுணர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள உடையார்பாளையத்தைச் சார்ந்த சிதளவாடியென்னுஞ் சிற்றூர்க்கண் இன்றைக்கு சற்றேறக்குறைய 250 ஆண்டுகளுக்கு முன் வன்னிய குலத்துதித்த கோபாலன் படையாட்சியாரென்பாரொருவர் வாழ்ந்து வந்தார். இவர் கடுகூர் கிராமத்தில் இருந்த தனது தாய் மாமன் ஊர்க்கண் உறைவாராயினர். சின்னாளான பின் இவர் உலையா ஊக்கமும், சலியா உளமுங்கொண்டு ஊர்க்கருகிலிருந்த காடுகளை வெட்டித் திருத்தி உழுது பயிரிடத்தக்க நிலையில் பண்படுத்தினார், அந்நிலத்தோர்பால் தனக்கென ஒரு இல்லம் அமைத்து நற்பண்புடன் தாளாண்மை மிக்க

**கோபாலன் குடிக்காடு என்ற பெயர் வந்த காரணம்**

வேளாண்மையினை இனிதுற நடத்தி வந்தார். அவ்வேளாண்மையினைப் பண்ணையாள் கொண்டு நடத்த வேண்டியிருத்தலின் அவர்களுக்குஞ் சிறு சிறு வீடுகள் அவ்விடம் அமைத்துத்தந்துள்ளார். இவ்வாறு வீடுகள் பல உண்டாக்கவே இவ்விடம் ஒரு சிற்றூராகத் திகழ்ந்தது. இங்கு இவர்தம் உறவினர்களும் குடியேறினார்கள். வாழ்ந்து வந்த மக்கள் இவ்வூருக்குக் "கோபாலன்குடிக்காடு" எனப் பெயரிட்டு வழங்கலாயினார்கள். (இன்றும் கோப்பிலிங்கங்குடிக்காடு எனுந்திரிபுடன் வழங்கி வரும் இவ்வூரின்கண் மேற்படியாரின் குலத்தவர்களே வசித்து வருகிறார்கள்.)

**மங்கான் தோற்றம்**

இங்ஙனம் தனது இல்லத்தில் இல்லாளுடன் மனையறத்தை மாண்புடன் நடத்தி வந்த கோபால படையாட்சியாருக்கு "மங்கலமென்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட்பேறு" என்று அறத்தின் திறத்தினை முறைபெறக் கூறிய வள்ளுவன் தன் வாய்மொழிக்கிணங்க ஆண் மகவு பிறந்தது. அம்மகவிற்கு "மங்கான்" எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார்கள். இம் மங்கான் என்பவர் தனக்குத் தக்க பருவம் வந்துற்றதும் மணமது புரிந்து வாழ்க்கையினை செம்மையுற நடத்துவாராயினர். இவருக்கு ஆக்கள் மிகுந்த மந்தையொன்று உண்டு. அம்மந்தைக்கண்ணுள்ள ஆக்களுள் தலைமை பெற்றதும், எழில் மிகக்கொண்டதும், நிறைவுற்ற கருவுடனே இருக்கப் பெற்றதுமான ஆவொன்று மேய்ந்த இடத்தில் காணாமற்போய்விட்டது.

கண்ணெனப் போற்றி வந்த அக்கருக்கொள் ஆ காணாமற்போகவே அதனையறிந்த மங்கான் மூன்று நாள் முழுவதும் தேடியும் பலவிடங்களில் காணப்பெறா-

மையால் அளவிலாத் துயர்க் கடலிலாழ்ந்தவரானார்.

**ஆவின் மறைவும் இறைவனின் தோற்றமும்**

ஊண் உறக்கமின்றி உளம்பதறி நின்றார். மூன்றாம் நாள் இரவு உறங்குமிடத்து அவர் கனவில் ஒளி விடும் மேனியில் உயர் தவச்சால்பெலாம் விளங்கிடுமொப்பற்ற அருள் வடிவு கொண்டருளிய பெரியார் ஒருவர் தோன்றி ''அன்ப! கவலற்க; நினது ஆவைத் தனது புனிற்றிளங்கன்றுடனே மேல்புறமுள்ள வனத்தில் இரண்டு கல் தொலைவிலுள்ள பேராலமரத்திற்கும் மாவிலிங்க மரத்திற்குமிடையே சங்கம் புதற்கண் எனது அருட்காவலில் வைத்திருக்கிறோம். நீ வைகறையே சென்று காண்பாயாக ''வென்று நவின்றருளி மறைந்தார்.

**காணாமற் சென்ற ஆ வெளிப்படல்**

ஆவலினால் பொழுது புலர்வதை பெரிதும் எதிர்பார்த்திருந்த மங்கான் படையாட்சியார் கதிரவன் தோன்றியதும் தனது பணியாட்களுடன் சிறப்புறு கருவிகள் பல எடுத்துச்சென்று, காடுபுகுந்து நடைவழி செய்து, பெரியார் குறிப்பிட்ட இடமது அடைந்து நோக்கிய போழ்து மங்கான் படையாட்சியாரைக் கண்ணுற்ற அப்பசுவானது ''அம்மா அம்மா''வெனக் கதறிக்கொண்டு ஓடி வந்தது. ''அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்'' என்பதற்கிணங்க ஓடிவந்த ஆ, இவரது இரு கரங்களையும் மோந்து நின்றது.

இளங்கன்றுடன் ஆவைக் கண்ணுற்ற அவர் அளவிலா மகிழ்ச்சியெய்தினார். அப்புதற்கண் சாய்வுற்றிருந்த அனுமான் உருவமுள்ள கம்பமொன்றினையும் அதன் மீது பால் சொரியப்பெற்ற பான்மையினையும் உற்று நோக்கினார். ''அந்தோ! இதுவென்! என்று உளம்

உருகினார். கம்பப் பெருமாளைத் தொட்டு வணங்கினார்.

**கம்பப் பெருமாள் தோற்றம்**

“உலகத்தார்கட்கெல்லாம் அருள் சொரிந்து காக்கும் அண்ணலே! உனக்கு இப்பசு தன் பாலைச்சொரிந்து வழிபட்டிருக்கும் பான்மைதான் என்னே! மூன்று நாளளவுமெனது ஆவையும் அதன் கன்றினையுமோம்பியென்பால் தந்தருளிய உன்றன் வான்கருணைக்கு யான் வழி வழி ஆற்றும் கைம்மாறுதான் என்னே! இவ்வமயம் யான் உன்பால் வணங்குவதன்றி வேறொன்றறியேன்” என்று கூறி இருகை குவித்து கண்ணீர் மல்க மனமுருகித் துதித்து வணங்கினார். பிறகு பசுவையும் கன்றையும் உடன் அழைத்துச் சென்று இல்லம் சேர்ந்தார்.

**கம்பப் பெருமாள் மங்கானுக்கு அறிவுறுத்தியவை**

ஆகூழெய்தப்பெற்று நற்பயனடையுமொருவர் போன்று ஆவைப்பெற்று வந்த இவருக்கு ஏழாம் நாளிரவு மீண்டும் அவர்தம் கனவில் அப்பெரியார் தோன்றி “எண்ணாயிரம் கோடியாண்டு யோகமுற்றிருப்பாருமெளிதிற்காணற்கரிய ஒரு பெரும் பொருள் நேரில் காணப்பெற்றும் தொட்டு வணங்கிவிட்டுவந்தபேதையே என்னே உன் அறியாமை! நன்று நன்று! உன் கைப்பொருள் மட்டும் உடன்கொண்டாய்! அப்புதற்கண்ணிருந்த என்னைக் கைவிட்டாய்; பொய்ப்பொருள் விழைந்தனை! மெய்ப்பொருள் விடுத்தனை! என்னே உன் அறியாமை! எமக்கும் உனது முன்னோர்களுக்கும் முன்பிருந்த உரிமைத் தொடர்பு நீயறியாமையாலன்றோ என்னை விட்டு வந்தனை! அன்ப! சிதளவாடியில் வாழ்ந்த உன் முன்னோர் திருமாலை வழிபடும் திருக்குலத்து வந்தவராதலால்

பெருமாள் திருக்கோயில் எழுப்பி வழிபட நினைத்து மேற்கில் சென்று கற்கம்பம் செப்பனிட்டு வண்டியில் ஏற்றிக் கொணர்ந்தபோது, "அச்சு முறியக் கீழ் விழுந்த கம்பம் உச்சி முனை உடைந்ததே" என்று அன்று விட்டு வந்தார்களே அதே கம்பம்தான் நான் என்பதை நீ அறியாமையாலன்றோ என்னை மறந்து வந்தனை! அன்பனே இனி வாடற்க! எனது அருளுருவக் கம்பத்தை நிலை நிறுத்தும் உரிமை உன்னுடையதே. நாளையே நன்னாள்; கம்பத்தையெடுத்து நிலை நிறுத்தி நாடோறும் வழிபாடாற்றி வருவாயாக; என்னை உற்றுணரவே உன் ஆவை மறைத்து வைத்து புரந்தேன்; உன்னையும் உனது வழித்தோன்றல்களையும் காக்க கருணை கொண்டவன் யான் என்பதையும் அறிவாயாக. மேலும், கலியுகத்தார் கவலையை ஒழிக்கவே இங்ஙனம் தோன்றினேன். என் பெயர் '**கலியுக பெருமான்**' என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

**மங்கான் தவறுணர்ந்து வழிபடல்**

விழிப்பு நிலையெய்திய மங்கான் படையாட்சி-யார் கூறொணாதவுவகை கொண்டு பொழுது புலர்வதை கண்ணுற்று இருள் நீங்கியவுடன் மருள் சிறிதுமின்றி கருவிகள் கொண்டு காட்டினுள் நுழைந்து ஆவல் பிடர் பிடித்து உந்த ஓடினார். கண்கண்ட தெய்வமாய்த் திகழ் திருக்கம்பத்தைக் கட்டித் தழுவினார் உளம் பூரிக்க உடம்பெலாம் மயிர்க்கூச்-செடுக்க நாத் தழுதழுத்து யாதொன்-றுஞ்சொல்லொணாத பரவச நிலை-யடைந்தார். பின்னர் நினைவு வரப்-பெற்றார், மனத் தூய்மையுடன் இடந்தூய்மை செய்து திருக்கம்பத்தையெடுத்து நிலை நிறுத்தினார். அப்பெரு-மாளுக்குப் பாலிட்டு நீராட்டினார். மலர் சூட்டினார். 'கலியுகப் பெருமாளே! உன்னைப் போற்றிப்பரவ என் நா எழவில்லையே, யாது செய்வேன். கோதிலாக்கடவுளே!

குற்றமே புரிந்துளேன் நும்மாட்டு முற்றறிவுடையீர்! சிற்றறிவுடையேன் தவறைப்பொறுத்தருள்வீராக! என்றன் பிழையுணர்த்தி என்னையுமாட்கொண்டாய்! உமது திருவருளை எண்ணி இறைஞ்சுகின்றேன் "கவலைப்படாமல் என்னை நம்பி வழிபடு நான் காப்பாற்றுகின்றேன்" என்று அன்றொரு நாள் விசயனுக்கு உரைத்துக் காத்தது போல் இன்று என்னையும் காத்து நின்றாய்! உன்னை மறந்திடுவேனோ? மறப்பறியேன். இன்று முதல் உன்னையன்றி வேறெந்த தெய்வமும் வழிபடேன்! இதுவே உறுதி. யானும் என் வழித்தோன்றல்களும் உன்னையே எக்காலமும் வழிபடுவோம்" என்று உறுதிமொழிந்து கண்ணீர் வார்த்து வணக்கஞ்செய்தார் பிறகு மட்டற்ற மகிழ்ச்சியுடையராய்த் தனது இல்லம் சென்றார்.

**இறைவன் அருளாற்றலை அனைவருக்கும் அறிவித்தல்**

சென்ற அவர்தம் கிளைஞரையும் மற்றுமுள்ளாரனைவரையும் தன்பாலழைத்து அவர்களிடம் தான் கண்டுள்ள அநுமான் உருவமுள்ள கம்ப வடிவத்தின் மாண்பினையும் அருளாற்றலையுங்கூறினார். "இக்கம்பம் கண்கண்ட தெய்வம் என்பதனை யான் உணர்ந்தேன். நீங்களும் அவ்வாறு உணருங்கள். உணர்ந்து என்றும் வழிபாடாற்றுங்கள்!" என்று அறிவுறித்தினார். இதைக்கேட்ட அனைவரும் அவ்வண்ணமே அன்புடன் நாளும் வணங்கி நற்பேறெய்தி வந்தார்கள்.

அதன்பின் மங்கான் படையாட்சியார் தனது உரிமைப் பொருளைக்கொண்டு பெருமாளுக்கு மூல மண்டபம், மகா மண்டபம் இன்ன பிறவும் கட்டுவித்தார்.

**மங்கான் இறைவன்மாணடி சேர்தல்**

கொடிச் சேலையையும் உருவாக்கி கம்பப் பெருமாள் பக்கத்தில் வைத்து பூசைசெய்து, பின் தனது வீட்டிற்குக் கொண்டுபோய் உரிய இடத்தில் வைத்து, கம்பப் பெருமாளாகவே

சிந்தையிற்கொண்டு வீட்டிலும் பூசை செய்து வந்தார். பிரதி சனிக்கிழமை, விசேட நாட்கள், திருவிழா நாட்களில் கொடிச்சேலையை தனது வீட்டில் இருந்து கோயிலுக்குக் கொண்டுவந்து, உரிய இடத்தில் வைத்து பூசை வழிபாடு திருவிழாக்கள் முடிந்த பிறகு வீட்டுக்குக் கொண்டுபோய் வைத்துக்கொள்வார். வழிவழியாகத் தொடர்ந்து இந்த வழக்கம் உள்ளது.

சிறப்புற்ற நாட்களில் அவர் பெருமாளுக்கு தன் நிலத்து விளைந்த நல்ல தினைகொண்டு பொங்கலிட்டுப் படைப்பதுண்டு. நாள்தோறும் இவர் வழிபாடாற்றுவதில் சிறிதுந்தவறார். இறைவன்பால் தான் தந்துள்ள உறுதி மொழியினை நிறைவேற்றும் பொருட்டு வழி வழி வரு-வோர்க்குமிச் செய்தியைத் தெரிவிக்குமாறு கூறி, ''பற்றுக பற்றற்றான் பற்றினை: அப்பற்றை பற்றுக பற்று விடற்கு'' எனுமான்றோர் மொழியினையுளங்கொண்டு பற்றற்றானடியை பற்றி நின்று ''பிறவிப்பெருங்கடல் நீந்துவார் நீந்தார் இறைவனடி சேராதார்'' எனுஞ்சீரிய மொழிக்கிணங்க பெயருக்கேற்ப என்றுமே மங்காத பெரும் புகழ் நிறுவிய மங்கான் படையாட்சியார் பெருமாள் தன் நற்றாளடைந்து பேரின்பம் திளைக்கலுற்றார்.

மங்கான் படையாட்சியாருக்குப் பிறகு அவரது திருமகனார் திரு. நாராயண படையாட்சியார் பெருமாளுடன்
பேசிப்பழகும் பேறு பெற்ற தம்
முன்னோர் பெற்றோர்களின் உருவச் சிலைகளை
வழியில் மூல மண்டபத்தில் பெருமாளுக்கு
பின்னோர் அண்மையில் நிலை நிறுத்தினார்.
கம்பப் பெருமாளுக்கும். பெற்றோர் சிலைகளுக்கும் பூசை அபிஷேக ஆராதனைகள் நடத்தி வந்தார். இது தொடர்ந்து பழக்கத்தில் நடந்து வருகிறது.

அதன் பின்னர் பரம்பரையில் வந்த ஆதீன பரம்பரை தருமகர்த்தாக்கள் ஆலயத் திருப்பணியில் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து திருக்கோயிலுக்குத் தேவையான பற்பல மண்டபங்கள், கட்டிடங்கள், சத்திரங்கள், திருக்குளங்கள், சாலைகள் தோப்புகள் உண்டாக்கி, திருவாபரணங்கள், வெள்ளி வாகனங்கள் செய்தல் ஆகிய திருப்பணிகளைச் சிறப்புறச் செய்து கலியபெருமாள் பாதம் சேருவதையே சிறப்பாகக் கருதி வாழையடி வாழையாகத் தொண்டு செய்து வருகிறார்கள்.

ஆண்டுதோறும் பங்குனி மாதம் அமாவாசைக்குப் பின் ஒன்பதாம் நாள் ஸ்ரீராம நவமியன்று ஆண்டுப் பெருந்திருவிழா துவங்கி, பத்து நாட்கள் சீரும் சிறப்பும் மிக்கதாக நடைபெற்று வருகின்றது

இதுவே இத்திருக்கோயிலைப் பற்றிய உண்மை வரலாறாகும் விரிவான வரலாறொன்றும் விரைவில் வெளிவரும்.

கல்லங்குறிச்சி
1—3—1995

**கோ. கோவிந்தசாமி படையாட்சி,**
ஆதீன பரம்பரை தருமகர்த்தா.

குறிப்பு :- முன்னாள் தருமகர்த்தா திரு. க. பழனிமுத்து படையாட்சி அவர்களால் இதன் முதல் பதிப்பு 18—2—1954-ல் வெளியிடப்பட்டது.